**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 02.08.2021–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : .08.2021 இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சி பாரதிதாசன் சாலை நடுநிலைப் பள்ளியில் மூன்று வகுப்பறைகள் கட்டும் ரூ. 40.00 இலட்சம் மதிப்பீட்டுப் பணிக்கு 30.07.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) அஞ்சனி கன்ஷ்ரக்சன், 68–1, ஓவியம்பாளையம், பரமத்தி – மதிப்பீட்டைவிட 0.01% அதிகம்
2) அசோக் கன்ஷ்ரக்சன், 10/245, துறையூர் மெயின் ரோடு,
பொன்னேரி – மதிப்பீட்டைவிட 0.35% குறைவு.

மதிப்பீட்டைவிட 0.35% குறைவான அசோக் கன்ஷ்ரக்சன் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மதிப்பீட்டைவிட 0.35% குறைவான அசோக் கன்ஷ்ரக்சன், நிறுவன ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1749/21/இ1)

**தீர்மானம் எண். 1067**

அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சி அலுவலகத்திலுள்ள கணினி, கணினி பிரிண்டர், நகலியந்திரம் (Xerox) கண்காணிப்பு கேமரா மற்றும் LED monitor ஆகியவைகளை ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ள ரூ. 210000/– மதிப்பீட்டுப் பணிக்கு 30.07.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) Spyder Technology, 153, PMC Plaza,
Suramangalam Road, Salem – 5 – மதிப்பீட்டைவிட 0.78% குறைவு.
2) Digi Print Service, 15, opp. Arts Collage,
Vincent, Salem – 7 – மதிப்பீட்டைவிட 0.53% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.78% குறைவான M/s. Spyder Technology நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதற்கு மன்ற அங்கீகாரமும் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மதிப்பீட்டைவிட 0.78% குறைவான M/s. Spyder Technology ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2) பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2589/21/இ1)

**தீர்மானம் எண். 1068**

அனுமதிக்கப்பட்டது.

(3) சென்னை, உயர்நீதி மன்ற வழக்கு நீதிப்பேராணை எண். 22169/2019 திரு P.R. கந்தசாமி என்பவர் 50% பணிக்காலத்தை கணக்கில் கொண்டு ஓய்வூதியப் பயன்கள் அனுமதிக்கக் கோரி தொடர்ந்த வழக்கின்மீது சென்னை, உயர்நீதி மன்றம் 28.02.2020–இல் பிறப்பித்த ஆணை தொடர்பாக திரு P.S. சிவசண்முகசுந்தரம், Special Government Pleader அவர்களிடம் சட்டக் கருத்துரு கோரப்பட்டது. சட்டக் கருத்துரு வழங்கப்பட்டுள்ளது. வழங்கியதற்கான வழக்குக் கட்டணம் ரூ. 7500/– வழங்க கோரியுள்ளார். எனவே, திரு P.S. சிவசண்முகசுந்தரம், Special Government Pleader அவர்களுக்கு ரூ. 7500/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** திரு P.S. சிவசண்முகசுந்தரம், Special Government Pleader அவர்களுக்கு வழக்கு எண். 22169/2019–ற்கு சட்டக் கருத்துரு வழங்கியதற்கான கட்டணம் ரூ. 7500/– வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(2119/19/சி1)

**தீர்மானம் எண். 1069**

அனுமதிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் 2020–21–ஆம் ஆண்டு கணக்குகளை இணையத்தின் மூலம் முடித்துக் கொடுக்கும் பணிக்கு 8.6.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | தொகை |
|---|---|---|
| 1) | பி. சுபத்ரா, த/பெ. பாலசுப்ரமணியம், தேவனாங்குறிச்சி, திருச்செங்கோடு | ரூ. 60,000/– |
| 2) | ஜி. பிரியதர்ஷினி, த/பெ. எம். கணேசன், தோக்கவாடி | ரூ. 55,000/– |
| 3) | எ.வி. ஸ்ரீதர், த/பெ. எ. வைரவேல், இ189, கூட்டப்பள்ளி காலனி, திருச்செங்கோடு – 637 214 | ரூ. 50,000/– |

வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் வ.எண். 3–இல் கண்டுள்ள திரு எ.வி. ஸ்ரீதர் அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு எ.வி. ஸ்ரீதர் அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

(2119/19/சி1)

**தீர்மானம் எண். 1070**

அனுமதிக்கப்பட்டது.

(5) நகராட்சிக்குச் சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களுக்கு 2021–22–ஆம் ஆண்டிற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் ஆடு அடிக்கும் தொட்டி

குத்தகைக்கு நகர்மன்ற தீர்மானம் எண். 969 நாள் 26.02.2021–இன்படி திரு கே. இலட்சுமணன் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்கியுள்ளது. குத்தகை உரிமத்தினை ஒப்படைப்பு செய்வதாக கடிதம் வழங்கியுள்ளார். வருவாய் ஆய்வர் குறிப்பின்படி குத்தகை உரிமத்தினை ரத்து செய்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(4523/20/அ2)

**தீர்மானம் எண். 1071**

அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– ஆ.குணசீலன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர் (கூ.பொ),
இராசிபுரம் நகராட்சி.